**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.35/2026**

**நாள் : 24.06.2026**

**எ.ம.சா.** 3 (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஜெகதீசன் | மாவட்டம் | : | சென்னை |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.நரசிம்மன் | வயது | : | 42 |
| ஊர் | : | சென்னை | தொழில் | : | மேலாளர் |
| வட்டம் | : | சென்னை | தேசியம் | : | இந்தியன் |

**முதல் விசாரணை**

1. மாதிரி வரைபடம் – எ.ம.சா.ஆ.4

2. விதிகளுடன் கூடிய பாலிசி நகல் – எ.ம.சா.ஆ.5

மனு தள்ளுபடியாக வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

நான் 2 ஆம் எதிர்மனுதாரர் கம்பெனியில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். TN 29 BU 1220 என்ற நான்கு சக்கர வாகனம் எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. விபத்தின் போது லோகநாதன் என்பவர் அந்த வாகனத்தை ஓட்டியுள்ளார். அவர் மீது தான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறுதி அறிக்கை தாக்கல்

செய்யபட்டுள்ளதா என்று தெரியவில்லை. பொன்னுசாமி என்பவர் எந்த பாலிசிக்கு மூன்றாம் தரப்பினர் என்றால் சரிதான். அவர் சாலையை கடக்க தனது TVS 50 வாகனத்துடன் நின்று கொண்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. TVS 50 வாகனம் 48.5 CC திறன் கொண்டது என்றால் சரிதான். 50 CC க்கு குறைவாக வாகனத்தை இயக்க ஓட்டுநர் உரிமம் தேவையில்லை என்றால் சரியல்ல. மூன்றாம் தரப்பினர் என்பதால் எங்களது காப்பீட்டு நிறுவனம் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஓம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.